மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு மே 29.05.2020 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட வீடுகளில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்திகீழ் சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டம் சுழற்சி நிதியின் கீழ் (UIDSSMT – Revolving fund) ரூ.280.00 இலட்சம் மதிப்பீட்டில் 8100 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 13277/2018/ws.1 நாள்.19.06.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 13277/2018/DO1 நாள். 16.09.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வரும் இந்நிலையில் பண்ணுருட்டி நகராட்சி குடிநீர் விநியோக உபவிதிகளின்படி கீழ்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | வகை | குடியிருப்பு (ரூபாயில் | வணிகம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | வைப்புத் தொகை | 5000.00 | 10000.00 |
| 2 | இணைப்பு பொருட்கள் மற்றும் பணியாளர் செலவு<br>1. தார்சாலை<br>2. சிமெண்ட் சாலை | <br>3011.00<br>3070.00 | <br>3011.00<br>3070.00 |

மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்திடவும் மேற்படி கட்டணத் தொகையினை சமகால தவணைத் தொகைகளில் வீட்டு வரியுடன் சேர்த்து கீழ்காணும் விவரப்படியாக நிர்ணயம் செய்து வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| 10 தவணைக்கான மொத்த தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ. 8011.00 | ரூ. 8070.00 | ரூ. 13011.00 | ரூ. 13070.00 |
| ஒரு தவணைக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகை | | | |
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ. 801.00 | ரூ. 807.00 | ரூ. 1301.00 | ரூ. 1307.00 |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்

**கோ.எண் 1519 /2018/ இ2**

2. நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை தனியார் வசம் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 'தினச்செய்தி' என்கின்ற தமிழ் நாளிதழிலும், 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்கின்ற ஆங்கில நாளிதழிலும் 03.01.2019 தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் தொகை ரூ. 74,550/– வழங்க கோரி 'Bright Advertising, Chennai' அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளதால், தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 3040/2018/எச்1**

3 பண்ணுருட்டி நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் உள்ள Xerox மிஷின் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்சமயம் உபயோகத்தில் உள்ளது. அதற்கு தேவையான டோனர்கள் சப்ளை செய்ய உத்தேச செலவினம் ரூ.40,000/– மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 12.05.2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு டோனரின் விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | AIMS Netcafe, Panruti | ரூ. 7,800/– |
| 2 | HI-Tech Systems, Panruti | ரூ. 7,950/– |
| 3 | Techno Solutions, Panruti | ரூ. 8,050/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் Aims Netcafe, Panruti அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள Aims Netcafe விலைப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கி பொருட்கள் சப்ளை பெறவும் அதற்கான செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்., 648/எப்1/2020

4. பண்ணுருட்டி நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் தேர்தல் பணிக்கு என உள்ள Xerox இயந்திரம் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது. அதில் அதிக அளவில் பிரிண்ட் எடுக்க ஏதுவாக டோனர் இருப்பு இல்லாததால் பணியின் அவசரம் கருதி புதியதாக ஐந்து டோனர்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.40,000/–க்கு மன்ற அனுமதியும், செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்து கொள்ள மன்ற முன் அனுமதி வழங்கலாம்.

**கோ.எண். 648/2020/எப்1**

5. தமிழக பள்ளி கல்வி (ப.க.4 (1)த்துறை அரசாணை (நிலை) எண். 77 நாள். 13.04.2015ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32050/ஜெ2/2016–1 நாள். 07.12.2016ன்படி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு ஆண்கள், பெண்கள், பள்ளிகள், மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்கள் கடந்த ஆண்டுகளை போலவே இந்த கல்வி ஆண்டும் (2020–2021) ஜுன் 2020 முதல் ஏப்ரல் 2021 வரை ஜான்சி ராணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியரக தர ஊதியம் வழிகாட்டுதலின்படி நாள் ஒன்றுக்கு, பணியாளர் ஒருவருக்கு ரூ.300/– வீதம் வழங்கிடுவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 1252/2020/எச்1

6. பண்ணுருட்டி நகராட்சியின் 2019–2020 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்

கோ. எண். 4117/2016/சி1

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 29–05–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பண்ணுருட்டி நகராட்சி.